### சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள

# வணிகவரித் துறை அலுவலகத்தில் 'அழைப்பு மையம்'

## அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 17-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி நேற்று (16.06.2023) சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித் துறை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அழைப்பு மையத்தை (Call Center) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வணிகவரித் துறை,வரி நிர்வாகத்தில் தொடர்ந்து புதுமையான மற்றும் அறிவியல் பூர்வமான உத்திகளைப் பயன்படுத்தியும் வணிகர்களிடையே வரி செலுத்துவதில் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவித்தும் அரசுக்கு வருவாய் ஈட்டுவதில் முன்னோடித் துறையாக வணிகவரித் துறை விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மிக உறுதுணையாக இத்துறை தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளது.

வணிகவரித்துறையில் தற்பொழுது 11 லட்சம் வணிகர்கள் முறையாக நமூனாக்கள் (Monthly Returns) தாக்கல் செய்து, உரிய வரியை செலுத்தி வருகின்றனர்.

சில வணிகர்கள் உரிய நேரத்தில் நமூனாக்கள் தாக்கல் செய்யாமலும், செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமலும் இருக்கும் நிலை தொடர்கிறது.

இதனை நேர் செய்யும் வகையில், ரூபாய் 1.80 கோடி மதிப்பீட்டில் 40 பணியாளர்களைக் கொண்டு இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அழைப்பு மையம் (கால் சென்டர்) அமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த அழைப்பு மையத்தின் பணியாளர்கள், நமூனாக்கள் தாக்கல் செய்யாத மற்றும் வரி செலுத்தாத வணிகர்களை தொடர்ந்து கண்காணித்து, தரவுகளை ஆய்வு செய்து, அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, விரைந்து நமூனாக்கள் தாக்கல் செய்வதோடு, உரிய வரியையும் செலுத்துமாறு அறிவுறுத்துவார்கள்.

வணிகர்களிடம் பெறப்படும் பதில்கள் அழைப்பு மையத்தின் மென்பொருள் மூலம் மின்னஞ்சல் வழியே உரிய வரி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, மேல் அதிகாரிகளின் ஆய்வுக்காக தரவுகள் பகிரப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் அரசுக்கு வர வேண்டிய வருவாய் இந்த நிதியாண்டில் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, அரசு முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ்குமார், கூடுதல்ஆணையர் நிர்வாகம் திருமதி வி.ஆர். சுப்புலட்சுமி மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகுக் குழாம்களில்

# 2 மாதங்களில் 13 லட்சம் பேர் படகுச் சவாரி செய்து சாதனை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 17-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல், மே மாதங்களில் மொத்தம் 13,11,157 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்ற னர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (15.06.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.



கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் உணவங்கள், தங்கும் விடுதிகள் புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவு பெற்றதன் காரணமாக விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத் துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு என, பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 13,11,157 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டு நீங்காத அனுபவங்களை பெற்றனர். இவற்றில் மலைப்பகுதி சுற்றுலா தலங்களான ஊட்டியில் 6,81,140 சுற்றுலா பயணிகளும், கொடைக்கானலில் 2,29,840 சுற்றுலா பயணிகளும், ஏற்காட்டில் 1,57,753 சுற்றுலா பயணிகளும் படகு பயணம் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மிகவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய மேலாளர்கள், மண்டல மேலாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், படகு குழாம்கள் மூலமாக அதிக லாபம் ஈட்டும் வகையில், பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு மேற்கொள்ளவேண்டும். மேலும் தங்கும் விடுதி அறைகளை சிறப்பாக பராமரித்தல், பொதுமக்களை ஈர்க்கும் வகையான உணவு வகைகளை தயாரித்து வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.வி.பாரதி தேவி, முதன்மை கணக்கு அலுவலர் எஸ்.கணேஷ் கார்த்திகேயன், உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) செள.வெங்கடேசன், திட்ட பொறியாளர் பால் ஜெப ஞானதாஸ் உள்பட மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

### தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் - இளைஞர் அணி சார்பாக

# கழக ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் "திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம்" நடைபெற உள்ளது. அது சமயம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் தெருமுனை பிரச்சார கூட்டத்தினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| நாள் நேரம் | ஒன்றியம் / ஏற்பாட்டாளர் | பேச்சாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 17.06.2023 மாலை 5.00 | பாலக்கோடு கிழக்கு K.R.C செல்வராஜ் | திருச்சி சேகர் | பாடி ஊராட்சி கண்ணுகாரம்பட்டி |
| 17.06.2023 மாலை 6.00 | பாப்பாரப்பட்டி பேரூர் சண்முகம் பேரூர் செயலாளர் | முரசொலி மூர்த்தி | பேருந்துநிலையம் |
| 17.06.2023 இரவு 7.00 | பென்னாகரம் வடக்கு ஜி.சபரிநாதன் ஒன்றிய செயலாளர் | முரசொலி மூர்த்தி | நாகதாசம்பட்டி |
| 18.06.2023 மாலை 5.00 | ஏரியூர் ஒன்றியம் என்.செல்வராஜ் ஒன்றிய செயலாளர் | திருச்சி சேகர் | கோடிஅள்ளி ஊராட்சி ஜக்கம்பட்டி |
| 18.06.2023 மாலை 6..00 | பென்னாகரம் தெற்கு மடம்.க.முருகேசன் ஒன்றிய செயலாளர் | காவேரிப்பட்டினம் இளையராஜா | அஞ்சேஅள்ளி ஊராட்சி பளிஞ்சரஅள்ளி |
| 18.06.2023 இரவு 7..00 | பென்னாகரம் பேரூர் வீரமணி பேரூர் செயலாளர் | காவேரிப்பட்டினம் இளையராஜா | கிருஷ்ணாபுரம் |
| 19.06.2023 மாலை 5.00 | நல்லம்பள்ளி மேற்கு ராஜகோபால் ஒன்றிய அமைப்பாளர் | இலயோலாராஜசேகர் | பண்டஅள்ளி ஊராட்சி பங்குநத்தம் |
| 19.06.2023 மாலை 6..00 | தருமபுரி மேற்கு ரமேஷ் ஒன்றிய அமைப்பாளர் | இலயோலாராஜசேகர் | அதகபாடி ஊராட்சி அதகபாடி |
| 19.06.2023 இரவு 7..00 | தருமபுரி நகரம் நாட்டான் மாது நகர செயலாளர் | இலயோலாராஜசேகர் | தருமபுரி நகரம் |
| 21.06.2023 மாலை 5.00 | நல்லம்பள்ளி கிழக்கு எ.எஸ்.சண்முகம் ஒன்றிய செயலாளர் | பசும்பொன். மு.ராமசந்திரன் | இலளிகம் ஊராட்சி இலளிகம் |
| 21.06.2023 மாலை 6.00 | நல்லம்பள்ளி மத்தியம் கே.பி.மல்லமுத்து ஒன்றிய செயலாளர் | பசும்பொன். மு.ராமசந்திரன் | பாளையம்புதூர் |

**தடங்கம் பெ.சுப்ரமணி**
செயலாளர்
தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

---



# தி.மு.க. இளைஞர் அணி

### கழக மாவட்ட–மாநகரங்களில் உள்ள ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களுக்கும், புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களில் உள்ள தொகுதிகளுக்கும் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு.

கழக மாவட்ட – மாநகரங்களில் உள்ள ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களுக்கும், புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களில் உள்ள தொகுதிகளுக்கும் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- 35 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.
- முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்து விண்ணப்பிக்கலாம். மாவட்டக் கழகத்திடமிருந்தோ, மாவட்ட அமைப்பாளரிடமிருந்தோ, அன்பகத்தில் இருந்தோ விண்ணப்ப நகலைப் பெற்றும் விண்ணப்பிக்கலாம்.
- அந்த விண்ணப்பம் கீழ்காணும் விண்ணப்ப மாதிரியைப் போல் இருப்பது அவசியம்.
- விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழின் நகல் இணைப்பது அவசியம்.
- இதுவரை ஆற்றிய கழகப் பணிகள் குறித்த ஆவணங்கள் இருக்கும்பட்சத்தில் அவற்றின் நகல்களையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம்.
- முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, அன்பகத்திலோ ஜூன் 30–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும். நேர்காணல் நடைபெறும் நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.
- ஒன்றிய, நகர, பகுதிக்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்களும், பேரூருக்கு ஒரு அமைப்பாளர், மூன்று துணை அமைப்பாளர்களும் நியமிக்கப்படுவர்.
- ஒன்றிய கிளைகள், நகர–பகுதி–பேரூர் வார்டுகளில் இளைஞர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வது குறித்த அறிவிப்பு பிறகு வெளியிடப்படும்.



## தி.மு.க. இளைஞர் அணி

### அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்

### சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ........................................

சட்டமன்றத் தொகுதி : ........................................

ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் : ........................................

மாநிலம், தொகுதி (புதுச்சேரி–காரைக்கால் மட்டும்) : ........................................

பொறுப்பு : ☐ அமைப்பாளர்
☐ துணை அமைப்பாளர்

பெயர் : ........................................

தந்தை பெயர் : ........................................

பிறந்த தேதி : .............................. வயது..............................

கல்வித் தகுதி : ........................................

தொழில் : ........................................

முகவரி : ........................................
........................................

வாட்ஸ்–அப் எண் : ........................................

மின்னஞ்சல் : ........................................

இளைஞர் அணியில் உறுப்பினராகச் சேர்ந்த ஆண்டு : ........................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும் விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 16–06–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி